www.kalvinews.com

Sl. No. :

**EO4HR/17**

பதிவு எண் | | | | | | | | | |

**2017**

# இந்து மதம், சைவமும் வைணவமும்
# (SSLC தரம்)

அனுமதிக்கப்பட்டுள்ள நேரம் : 3 மணி] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்குமுன் கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்**

**முக்கிய அறிவுரைகள்**

1. இந்த வினாத் தொகுப்பு தேர்வு தொடங்குவதற்கு 10 நிமிடங்களுக்கு முன்னதாக விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு **200** வினாக்களைக் கொண்டுள்ளது. விடையளிக்க தொடங்குமுன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும் இடையில் ஏதும் வெற்றுத்தாள்கள் உள்ளனவா என்பதையும் சரிபார்த்துக் கொள்ளவும். **ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை பத்து நிமிடங்களுக்குள் அறைகண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத் தொகுப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு, முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்பட மாட்டாது.**
3. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
4. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத் தொகுப்பில் எழுதக் கூடாது.
5. விடைகளை குறித்து காட்ட என, விடைத்தாள் ஒன்று உங்களுக்கு அறைக் கண்காணிப்பாளரால் தரப்படும்.
6. உங்களுடைய பதிவு எண், தேர்வுத்தாள் எண் மற்றும் வினாத்தொகுப்பு வரிசை எண் (Sl. No.) முதலியவற்றையும் விடைத்தாளின் இரண்டாம் பக்கத்தில் அவைகளுக்காக அமைந்துள்ள இடங்களில் நீலம் அல்லது கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். மேற்கண்ட விபரங்களை விடைத்தாளில் நீங்கள் குறித்துக் காட்டத் தவறினால் தேர்வாணைய அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
7. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C) மற்றும் (D) என நான்கு விடைகளைக் கொண்டுள்ளது. நீங்கள் அவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் ஒரு கேள்விக்கு இருப்பதாகக் கருதினால் நீங்கள் மிகச் சரியானது என்று எதைக் கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக் காட்ட வேண்டும். எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடையைத்தான் தேர்ந்தெடுக்க வேண்டும். உங்களுடைய மொத்த மதிப்பெண்கள் நீங்கள் விடைத்தாளில் குறித்துக் காட்டும் சரியான விடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்தது.
8. விடைத்தாளில் ஒவ்வொரு கேள்வி எண்ணிற்கும் எதிரில் Ⓐ, Ⓑ, Ⓒ மற்றும் Ⓓ என நான்கு விடை வட்டங்கள் உள்ளன. ஒரு கேள்விக்கு விடையளிக்க நீங்கள் சரியென கருதும் விடையை ஒரே ஒரு விடை வட்டத்தில் மட்டும் நீலம் அல்லது கருமைநிற மையுடைய பந்து முனைப் பேனாவினால் குறித்துக் காட்ட வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒரு விடையைத் தேர்ந்தெடுத்து விடைத்தாளில் குறிக்க வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால் அந்த விடை தவறானதாகக் கருதப்படும். உதாரணமாக நீங்கள் Ⓑ என்பதை சரியான விடையாகக் கருதினால் அதை பின்வருமாறு குறித்துக் காட்ட வேண்டும்.

   Ⓐ ● Ⓒ Ⓓ
9. நீங்கள் வினாத் தொகுப்பின் எந்தப் பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத் தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வுக் கூடத்தை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளைக் கண்காணிப்பாளரிடம் கொடுத்து விட வேண்டும். இவ்வினாத் தொகுப்பினைத் தேர்வு முடிந்தவுடன் நீங்கள் உங்களுடன் எடுத்துச் செல்லலாம்.
10. குறிப்புகள் எழுதிப் பார்ப்பதற்கு வினாத் தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன்பக்கத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.
11. வினாத் தொகுப்பில் விடையை குறியிடவோ, குறிப்பிட்டுக் காட்டவோ கூடாது.
12. மேற்கண்ட அறிவுரைகளில் எதையாவது மீறினால் தேர்வாணையம் முடிவெடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

SEAL

ß

www.kalvinews.com

1. "தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய இம்மூன்றும் வெற்றிக்கு வித்துகளாகும்" என்று கூறியவர்

(A) சுவாமி விவேகானந்தர்
(B) ஸ்ரீ இராமகிருஷ்ணர்
(C) ஸ்ரீ அரவிந்தர்
(D) இராஜாராம் மோகன்ராய்

2. இராமானுஜர் கருத்துப்படி எவ்விரண்டின் தொடர்பு 'அப்ரதக்சித்தி'

(A) ஜீவா மற்றும் பிரம்மன்
(B) ஜீவா மற்றும் ஜெகத்
(C) ஜீவா, பிரம்மன் மற்றும் ஜெகத்
(D) பிரம்மன் மற்றும் ஜெகத்

3. சங்கரருடைய வாதம் ———— ஆகும்.

(A) சத்காரிய வாதம்
(B) அசத்காரிய வாதம்
(C) விவர்த்த வாதம்
(D) பிரம்ம பரிணாம வாதம்

4. 'பிரஸ்தான த்ரயம்' என்று அழைக்கப்படுவது

(A) உபநிடதம், கீதா, ராமாயணம்
(B) பிரம்ம சூத்ரா, உபநிடதம், மகாபாரதம்
(C) உபநிடதம், பிரம்மசூத்ரா, கீதா
(D) கீதா, உபநிடதம், பெரியபுராணம்

5. இறைவனுக்கு தேங்காய் உடைப்பது எதற்காக?

(A) இன்பம் விலகி துன்பம் பெருகுவதற்கு
(B) துன்பம் விலகி இன்பம் பெருகுவதற்கு
(C) இன்பம் மற்றும் துன்பம் மறைவதற்கு
(D) துன்பம் மற்றும் இன்பம் பெறுவதற்கு

6. கீழ்கண்டவற்றுள் எந்த இணை சரியற்றது?

(A) அத்வைதம் - விவர்த்த வாதம்
(B) விசிட்டாத்வைதம் - பிரம்ம பரிணாம வாதம்
(C) துவைதம் - ப்ரக்ரித்தி பரிணாம வாதம்
(D) சைவசித்தாந்தம் - சூன்ய வாதம்

7. தாதாத்மியா என்பதன் பொருள்

(A) பிரம்மனுக்கும் உயிருக்கும் உள்ள உறவு
(B) பிரம்மனுக்கும் உலகுக்கும் உள்ள உறவு
(C) பிரம்மனுக்கும் மாயைக்கும் உள்ள உறவு
(D) பிரம்மனுக்கும் ஆணவத்திற்கும் உள்ள உறவு

www.kalvinews.com

8. விஷ்ணு, ஹிரண்யாஷன் எனும் அரக்கனை அழித்து, கடலில் இருந்து பூமியை வெளியில் கொணர்ந்த அவதாரம்

(A) வராகாவதாரம் (B) மச்சாவதாரம்

(C) வாமனாவதாரம் (D) பரசுராமாவதாரம்

9. கோகுல கண்ணன் எத்தனை வயதுவரை கோகுலத்தில் வாழ்ந்தான்?

(A) 15 வயது வரை (B) 16 வயது வரை

(C) 17 வயது வரை (D) 18 வயது வரை

10. இராமானுஜர் தனது எத்தனையாவது வயதில் துறவறம் பூண்டார்?

(A) 09 (B) 13

(C) 18 (D) 28

11. கீழ்க்கண்டவற்றுள் விசிஷ்டாத்வைதம் ஏற்றுக் கொள்ளும் கூற்றுகள் எது?

I. பரப்பிரமம் ஒருவரே நித்யமானவர்

II. சித்தையும் அசித்தையும் உடலாக கொண்டிருப்பதே விசேஷம்

III. சித், அசித், பரப்பிரமம் மூன்றும் தனித்தனியாக இருக்கும்

(A) I, II மற்றும் III ஆகிய மூன்றும் சரியானது

(B) II மற்றும் III ஆகிய இரண்டு மட்டுமே சரியானது

(C) I மற்றும் II ஆகிய இரண்டு மட்டுமே சரியானது

(D) I மற்றும் III ஆகிய இரண்டு மட்டுமே சரியானது

12. கீழ்க்கண்டவற்றுள் விசிஷ்டாத்வைதத்தின்படி பொருந்தாத இணை எது?

(A) சித்து – சரீரம்

(B) பரப்பிரமம் – சரீரி

(C) சித்விருத்தி – சரீரி

(D) அசித்து – சரீரம்

www.kalvinews.com

13. விமானங்கள் எத்தனை வகைப்படும்?

(A) 1
(B) 3
(C) 5
(D) 7

14. இலிங்க சுத்தி என்பது

1. அபிடேக பாத்திரத்தில், நீர் நிரப்பி, கங்கை முதலிய ஒன்பது தீர்த்தங்களை அதில் ஆவாகனம் செய்து, இலிங்கத்தில் அபிடேகம் செய்ய வேண்டும்.
2. விக்கிரகங்களில் ஒட்டிக்கிடக்கும் மெழுக்கினைக் களைந்து சுத்த ஆடை கட்ட வேண்டும்.

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) 1ம் 2ம் சரி
(D) இவற்றில் எதுவுமில்லை

15. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | ஈசானமுகம் | 1. | வகரம் |
| (b) | தத்புருடம் | 2. | சிகரம் |
| (c) | அகோரம் | 3. | நகரம் |
| (d) | வாமம் | 4. | மகரம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 1 | 4 | 3 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 1 | 3 | 4 | 2 |
| (D) | 3 | 4 | 2 | 1 |

16. ஆலய நிர்மாணங்கள் எத்தனை வகைப்படும்?

(A) இரண்டு
(B) நான்கு
(C) ஆறு
(D) எட்டு

17. கீழ்கண்டவற்றுள் கடவுளை ஏற்றுக்கொள்ளாத சமயம் எது?

(A) வைணவம்
(B) சாக்தம்
(C) சைவம்
(D) சமணம்

www.kalvinews.com

18. நாராயணர் எதனை முழக்கி உலகைப் படைக்கிறார்?

(A) ஓங்காரம்
(B) பாஞ்ச ஜன்யம்
(C) நந்தகம்
(D) சார்ங்கம்

19. பொருத்துக :

| | ஆழ்வார்கள் | | அருளியவைகள் |
|---|---|---|---|
| (a) | திருமழிசை | 1. | திருவிருத்தம் |
| (b) | நம்மாழ்வார் | 2. | பெருமாள் திருமொழி |
| (c) | மதுரகவி | 3. | திருச்சந்த விருத்தம் |
| (d) | குலசேகராழ்வார் | 4. | கண்ணி நுண் சிறுதாம்பு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 2 | 4 |
| (B) | 3 | 1 | 4 | 2 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 1 | 3 | 2 | 4 |

20. நாலாயிர திவ்யபிரபந்தத்தின் இரு கண்களாகப் போற்றப்படுபவை ———————— ஆகும்.

(A) திருப்பாவை, திருப்பள்ளியெழுச்சி
(B) திருப்பாவை, திருவந்தாதி
(C) திருநெடுந்தாண்டகம், திருப்பாவை
(D) திருப்பாவை, நாச்சியார் திருமொழி

21. கீழ்க்கண்டவற்றை கால முறைப்படி வரிசைப்படுத்தவும்

I. குலசேகராழ்வார்
II. மதுரகவி ஆழ்வார்
III. பெரியாழ்வார்
IV. நம்மாழ்வார்

(A) II, IV, I, III
(B) II, I, IV, III
(C) IV, II, I, III
(D) IV, I, III, II

www.kalvinews.com

22. சைவ ஆகமங்களின் எண்ணிக்கை எத்தனை?

(A) இரண்டு (B) பதிநான்கு

(C) பதினெட்டு (D) இருபத்தெட்டு

23. சைவம் கூறும் முப்பொருள்கள் யாவை?

(A) பதி, பசு, பாசம் (B) கடவுள், ஆன்மா, உலகு

(C) ஞானம், கர்மம், பக்தி (D) அறம், பொருள், இன்பம்

24. நாயன்மார்களின் மொத்த எண்ணிக்கை

(A) 63 ஆகும் (B) 18 ஆகும்

(C) 12 ஆகும் (D) 10 ஆகும்

25. முதல் மூன்று திருமுறையின் நூலாசிரியர் யார்?

(A) திருஞானசம்பந்தர் (B) நீலகண்ட சாஸ்த்திரி

(C) மாணிக்கவாசகர் (D) தொல்காப்பியர்

26. பெரியபுராணம் யாருடைய வாழ்க்கை வரலாற்றை சித்தரிக்கிறது?

(A) ஆழ்வார்கள் (B) நாயன்மார்கள்

(C) ஆச்சாரியர்கள் (D) ஆழ்வார்கள் மற்றும் ஆச்சாரியர்கள்

27. எத்தனை திருமுறைகளைத் தேவாரம் என்று அழைப்பர்?

(A) 7 (B) 9

(C) 10 (D) 12

28. பன்னிரு திருமுறைகளை தொகுத்தவர்

(A) உமாபதி சிவம் (B) மெய்கண்ட தேவர்

(C) நம்பி ஆண்டார் நம்பி (D) சேக்கிழார்

www.kalvinews.com

29. "குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்" எனும் வரிகளால் போற்றப்படுபவர்

(A) பிரம்மா
(B) விஷ்ணு
(C) சிவன்
(D) பார்வதி

30. பொருந்தாத ஒன்றைக் கண்டறிக.

(A) நடராஜர்
(B) சண்முகர்
(C) சுப்பிரமணியர்
(D) சரவணபவர்

31. சைவ உபாகமங்களின் எண்ணிக்கை

(A) 93
(B) 103
(C) 113
(D) 123

32. இவற்றில் தவறான ஒன்றைக் கண்டறி.

(A) காயத்திரி மந்திரத்தில் இருபத்துநான்கு எழுத்துக்கள் உண்டு
(B) காயத்திரி மந்திரம் இரவில் மட்டும் ஜபிக்க வேண்டும்
(C) காயத்திரி மந்திர ஜபம் எல்லாத் தேவதைகளுடைய அருளைப் பெறுவதற்கும் உரியதாகும்
(D) காயத்திரி மந்திர ஜபத்தால் பாவங்கள் அழியும்

33. திருவிழா என்பதன் வேறுபெயர்கள்

(A) திருக்கலியாணம், பக்தோத்ஸவம்
(B) கௌதுகம், சூர்ணோத்ஸவம்
(C) மகோத்ஸவம், பிரமோத்ஸவம்
(D) வருடயாகம், ப்ரமஹத்தாளம்

34. சப்தமாதர்களின் சரியான வரிசையை தெரிவு செய்க.

(A) மகேசுவரி, வைஷ்ணவி, பிராம்மி, இந்திராணி, கௌமாரி, சாமுண்டி, வாராகி
(B) வைஷ்ணவி, பிராம்மி, மகேசுவரி, இந்திராணி, கௌமாரி, சாமுண்டி, வாராகி
(C) வாராகி, சாமுண்டி, கௌமாரி, இந்திராணி, மகேசுவரி, பிராம்மி, வைஷ்ணவி
(D) பிராம்மி, மகேசுவரி, கௌமாரி, வைஷ்ணவி, வாராகி, இந்திராணி, சாமுண்டி

35. திக்பாலகர்கள் எத்தனை பேர்?

(A) 4
(B) 8
(C) 16
(D) 32

www.kalvinews.com

36. “நானேயோ தவஞ்செய்தேன் சிவாய நம எனப் பெற்றேன்” எனப் பாடியவர்

(A) திருஞானசம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

37. இவற்றில் தவறான ஒன்றைக் கண்டறி

(A) சிவ சிவ என்கிலர் நல்வினை யாளர்

(B) சிவ சிவ என்றிடத் தீவினை மாளும்

(C) சிவ சிவ என்றிடத் தேவரு மாவர்

(D) சிவ சிவ என்னச் சிவகதி தானே

38. “சிவாய நமவென்று சிந்தித்திருப்போர்க்கு அபாயம் ஒரு நாளும் இல்லை” என்றுரைத்தவர்

(A) திருமூலர்

(B) தாயுமானவர்

(C) இராமலிங்க அடிகளார்

(D) ஔவையார்

39. இவற்றில் சரியானவற்றைத் தேர்ந்தெடுக்கவும்.

I. திருவிழா நடத்த வேண்டிய நாட்களைப் பற்றி ஆகமங்கள் வேறு வேறாகக் கூறுகின்றன.

II. திருவிழாக்களில் முக்கியமாக நடத்த வேண்டிய கிரியைகள் பதினெட்டாகும்.

(A) I சரி, II தவறு

(B) I-ம் II-ம் சரியானவை

(C) I தவறு, II சரி

(D) I-ம் II-ம் தவறானவை

40. பொருந்தாத தொடரைக் குறிப்பிடுக.

(A) ஸ்ரீரங்கத்தில் வைகுண்ட ஏகாதசி கொண்டாடப்படும்

(B) திருமாலடியார்கள் அன்று உபவாசம் இருந்து இறைவனை வணங்குவர்

(C) மார்கழி மாதத்தில் வரும் சுக்லபட்ச ஏகாதசியை வைகுண்ட ஏகாதசி என்பர்

(D) இம்மாதத்தில் மாணிக்கவாசகரின் திருவாசகத்தை அனைவரும் பாடி மகிழ்வர்

www.kalvinews.com

41. ஸ்ரீபெரும்புதூரில் பிறந்த வைணவ சமயத் தலைவர் யார்?

(A) சங்கரர்
(B) இராமானுசர்
(C) மத்துவர்
(D) தேசிகர்

42. பின்வருவனவற்றுள் முக்திக்கான நான்கு மார்கங்கள் கொண்ட சமயம் எது?

(A) சைவம்
(B) வைணவம்
(C) கௌமாரம்
(D) சௌரம்

43. சிவபெருமானைக் குருவாகக் காட்டும் வடிவம்

(A) நடராஜர்
(B) சோமாஸ்கந்தர்
(C) தட்சிணாமூர்த்தி
(D) லிங்கோத்பவர்

44. குறிஞ்சி நிலக்கடவுள் யார்?

(A) முருகன்
(B) பெருமாள்
(C) சிவன்
(D) பிள்ளையார்

45. சமண சமயத்திலிருந்து சைவ சமயத்திற்கு மாறிய அரசர் யார்?

(A) செங்குட்டுவன்
(B) இராஜராஜன்
(C) சேரன்
(D) கூன்பாண்டியன்

46. தஞ்சை பெரிய கோயில் யாரால் கட்டப்பட்டது?

(A) இராஜேந்திர சோழன்
(B) இராசராசன்
(C) பாண்டியர்கள்
(D) நந்திவர்மன்

47. சைவ சித்தாந்த நூல்கள் எத்தனை?

(A) பதிமூன்று
(B) இருபத்து ஒன்று
(C) பதிநான்கு
(D) ஒன்பது

www.kalvinews.com

48. கூற்று (A) : தத்துவ திரயங்கள் என்பது இறைவன், ஆன்மா, உயிர் ஆகும்.

காரணம் (R) : உயிர் கர்ம வினைகளைத் துறந்து முக்தியடைகிறது.

(A) (A) மற்றும் (R) சரியானது. (A)-விற்கான காரணம் (R) ஆகும்

(B) (A) மற்றும் (R) சரியானது. (A)-விற்கான காரணம் (R) இல்லை

(C) (A) சரியானது, ஆனால் (R) தவறு

(D) (A) மற்றும் (R) தவறானது

49. பிரம்மனை தண்டித்ததால் முருகப் பெருமான் அடைந்த திருமேனியின் பெயர் என்ன?

(A) பிரம்ம குமரன்

(B) குகபிரம்மா

(C) பிரம்மசாத்தா

(D) குருபிரம்மா

50. பின்வருவனவற்றில் வில்லேந்திய முருகனது திருவுருவங்கள் காணப்படும் இடங்களை தெரிவு செய்க.

(A) திருவிடைக்கழி, சுவாமிமலை, பழனி

(B) திருவிடைக்கழி, மருதமலை, திருவையாறு

(C) திருச்செந்தூர், மருதமலை, பழனி

(D) திருவிடைக்கழி, பட்டீசுவரம், சாயாவனம்

51. ஆலய பிரதிட்டைக்குரிய கிரியைகள் மொத்தம் எத்தனை?

(A) 18

(B) 64

(C) 12

(D) 15

52. பிரகாரங்களின் சரியான வரிசையைத் தேர்ந்தெடுக்க.

(A) அன்னமயம், மனோமயம், பிராணமயம்

(B) மனோமயம், பிராணமயம், அன்னமயம்

(C) பிராணமயம், அன்னமயம், மனோமயம்

(D) அன்னமயம், பிராணமயம், மனோமயம்

53. கீழ்க்காணும் வாக்கியங்களை ஆய்க :

கூற்று (A) : கர்ப்பகிரகம் என்பது எல்லா ஆலயங்களிலும் முக்கியமான இடமாகும்.

காரணம் (R) : உலகப் படைப்பிற்கு மூல பொருளாக அது இருக்கிறது.

(A) (A) மற்றும் (R) இரண்டும் சரி, மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கம்

(B) (A) மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A)-விற்கு சரியான விளக்கமல்ல

(C) (A) சரி ஆனால் (R) தவறு

(D) (A) தவறு ஆனால் (R) சரி

www.kalvinews.com

54. "நகரேசு காஞ்சி" என்று காஞ்சிபுரத்தை புகழ்ந்தவர் யார்?

(A) பாரதி
(B) புலவர் பாரவி
(C) பாஹியான்
(D) யுவான் சுவாங்

55. கேதுவினால் ஏற்படும் தீமைகள் நீங்கி நன்மைகளை அடைய எக்கடவுளை வணங்க வேண்டும்?

(A) சிவன்
(B) விஷ்ணு
(C) சித்ரகுப்தர்
(D) பைரவர்

56. பொருத்துக :

| | பட்டியல்-I | | பட்டியல்-II |
|---|---|---|---|
| (a) | கத்ய வலம்பித முத்திரை | 1. | ஏனைய விரல்கள் மடக்கி ஆட்காட்டி விரலை மட்டும் நீட்டுதல் |
| (b) | கடி முத்திரை | 2. | கைகள் தொடை மீது ஊன்றிய நிலை |
| (c) | ஊரு முத்திரை | 3. | கை கீழே தொங்கிய நிலை |
| (d) | சூசி முத்திரை | 4. | கைகள் இடுப்பில் ஊன்றிய நிலை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 3 | 2 | 1 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 3 | 4 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

57. "தென்னக எல்லோரா" என்று புகழப்படுவது எது?

(A) மாமல்லபுரம்
(B) கொனார்க் கோயில்
(C) குருவாயூர்
(D) வெட்டுவான் கோயில்

58. "குமார தந்திரம்" என்னும் நூலில் கூறப்பட்டுள்ள முருகப் பெருமானின் வடிவங்கள் எத்தனை?

(A) 6
(B) 12
(C) 16
(D) 18

www.kalvinews.com

59. "பஞ்சகவ்யம்" எதிலிருந்து கிடைக்கின்றது?

(A) பதி
(B) பசு மாடு
(C) பாசம்
(D) ஆணவம்

60. இந்துக்கள் வீட்டின் முற்றத்தில் எந்த செடியை வைத்து வழிபடுவர்?

(A) அருகம்புல்
(B) வில்வம்
(C) துளசி
(D) வேப்பிலை

61. சிவதலத்தில் கொடி மரத்திற்கு அடுத்து இருப்பது

(A) மயில்
(B) நந்தி
(C) கருடன்
(D) பெருச்சாளி

62. சிவசின்னம் என்பது

(A) நமச்சிவாயம்
(B) துளசி, தீர்த்தம்
(C) திருநீறும், உருத்திராக்கம்
(D) திருநீறும், துளசியும்

63. சிந்துச் சமவெளியில் எந்த தெய்வம் காணப்பட்டது?

(A) முருகன்
(B) சிவலிங்கம்
(C) விநாயகர்
(D) பிரம்மன்

64. சங்க நூல்களில் போர்க் கடவுளாக யாரை புகழ்கின்றார்கள்?

(A) சிவன்
(B) முருகன்
(C) இந்திரன்
(D) திருமால்

65. முல்லை நிலத்தில் எந்த தெய்வம் வழிபாடு செய்யப்பட்டது?

(A) முருகன்
(B) இந்திரன்
(C) திருமால்
(D) சிவன்

www.kalvinews.com

66. ஐந்து திருச்சபைகளைக் கொண்ட கோயில் எது?

(A) காஞ்சி கைலாசநாதர் கோயில்
(B) கும்பேஸ்வரர் கோயில்
(C) நடராஜர் கோயில்
(D) பிரகதீஸ்வரர் கோயில்

67. கீழ்கண்டவற்றுள் சாருவாகம் ஏற்றுக் கொள்ளாத பஞ்சபூதம் எது?

(A) பூமி
(B) நீர்
(C) காற்று
(D) ஆகாயம்

68. சமண சமயத்தின் முதல் தீர்த்தங்கரர் யார்?

(A) மகாவீரர்
(B) கௌதம புத்தர்
(C) கபிலர்
(D) ரிஷபதேவா

69. சமண சமயத்தில் 'ஜினா' என்ற வார்த்தையின் பொருள்

(A) தோல்வியுற்றவர்
(B) வெற்றியும் தோல்வியுற்றவர்
(C) வெற்றி பெற்றவர்
(D) உண்மையை கூறுபவர்

70. கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் எந்த பட்டியல் சரியானதல்ல?

(A) சியாத் ஆஸ்தி : சார்புடைய ஒரு பொருள் உண்மையானது
(B) சியாத் நாஸ்தி : சார்புடைய ஒரு பொருள் உண்மையற்றது
(C) சியாத் ஆஸ்தி நாஸ்தி : சார்புடைய ஒரு பொருள் உண்மையானது மற்றும் உண்மையற்றது
(D) சியாத் அவக்தவயம் : சார்புடைய ஒரு பொருளை விவரிக்க முடியும்

71. நன்நம்பிக்கை, நன்னறிவு, நன்நடத்தை - என்ற மூன்று ரத்தினங்களை கூறிய சமயம் யாது?

(A) புத்த சமயம்
(B) இந்து சமயம்
(C) இஸ்லாமிய சமயம்
(D) சமண சமயம்

72. ஆன்மா - இல்லா கோட்பாட்டை கூறிய சமயம் எது?

(A) சமண சமயம்
(B) இந்து சமயம்
(C) புத்த சமயம்
(D) கிறித்துவ சமயம்

www.kalvinews.com

73. அப்ரதக்சித்தி என்பது

I. உடலுக்கும் ஆன்மாவிற்கும் இடையேயான தொடர்பு

II. பருப்பொருளுக்கும் பண்புகளுக்கும் இடையேயான தொடர்பு

III. பகுதிகளுக்கும் முழுமைக்கும் இடையேயான தொடர்பு

IV. முழுமைக்கும் பண்புகளுக்கும் இடையேயான தொடர்பு

(A) I, III மற்றும் IV சரியானது

(B) I, II மற்றும் IV சரியானது

(C) II, III மற்றும் IV சரியானது

(D) I, II மற்றும் III சரியானது

74. கீழ்க்கண்டவற்றுள் சரியாக பொருந்தாதது எது?

(A) பிரம்மசம்பிரதயா – மத்துவர்

(B) ருத்ரசம்பிரதயா – ஆதிசங்கரர்

(C) ஸ்ரீசம்பிரதயா – இராமானுஜர்

(D) சனகசம்பிரதயா – நிம்பார்கர்

75. கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளை பயன்படுத்தி பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்துக :

| | பட்டியல் I | | பட்டியல் II |
|---|---|---|---|
| (a) | சித்து | 1. | சரீரி |
| (b) | அப்ரதக் சித்தி | 2. | கீதை – பாஷ்யம் |
| (c) | பரப்பிரமம் | 3. | ஜீவாத்மா |
| (d) | இராமானுஜர் | 4. | பிரிக்க இயலாதது |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 4 | 1 | 3 | 2 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

76. இராமானுஜரின் முதல் ஆசிரியர் யார்?

(A) யாதவபிரகாசர்

(B) பெரியநம்பி

(C) பாஸ்கரர்

(D) அச்சுதப்பிரகாசர்

www.kalvinews.com

77. வெள்ளை நிற ஆடையை உடுத்தும் சமண சமய பிரிவினர்

(A) இஸ்லாமியர்
(B) சீக்கியர்
(C) திகம்பரர்
(D) சுவேதாம்பரர்

78. "உண்ணுஞ் சோறும் பருகுநீர் தின்னும் வெற்றிலையும்"..... என்று தொடங்கும் பாடலை பாடியவர்

(A) பெரியாழ்வார்
(B) ஆண்டாள்
(C) நம்மாழ்வார்
(D) திருமங்கையாழ்வார்

79. புத்த சமயத்தின் போதனைகள் அடங்கிய நூலுக்குப் பெயர்

(A) திருவாசகம்
(B) திருமந்திரம்
(C) பிடகநூல்
(D) ஆதிகிரந்தம்

80. புத்த சமயத்தில் 'நிர்வாணம்' என்பதன் பொருள் யாது?

(A) துன்ப விடுதலை அடைதல்
(B) இன்பத்திலிருந்து விடுதலை அடைதல்
(C) (A) மற்றும் (B)
(D) மாயையிலிருந்து விடுதலை அடைதல்

81. 'புத்தர்' என்ற சொல்லின் பொருள் யாது?

(A) போதகர்
(B) நற்பண்புள்ளவர்
(C) அறிஞர்
(D) தீர்க்கதரிசி

82. சீவன், அசீவன், ஆச்சிரவம், சமுவரம், நிர்ச்சரம், பந்தம், வீடு என ஏழு வகை பொருள்களை கூறிய சமயம் எது?

(A) இந்து சமயம்
(B) வைணவ சமயம்
(C) சைவ சமயம்
(D) சமண சமயம்

83. 'காட்சிவாதம்' மட்டுமே உண்மை என்று கூறுகின்ற கொள்கை உடையது

(A) சமணம்
(B) சாக்கியம்
(C) மீமாம்ஸம்
(D) உலகாயதம்

www.kalvinews.com

84. தங்கம், வெள்ளி முதலிய உலோகங்களைக் கொண்டு அமைக்கப்படும் இலிங்கம்

(A) இரத்னஜம்
(B) லோகஜம்
(C) க்ஷணிகம்
(D) சைலஜம்

85. எப்போதும் ஆனந்த நிலையில் இருப்பவர் எனப் பொருள்படும் சொல்

(A) சிவன்
(B) சக்தி
(C) நந்தி
(D) சிங்கம்

86. ஆலய நிர்மான வகைகளின் சரியான வரிசையை தேர்வு செய்யவும்

(A) அநாவர்த்தம், ஆவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம்
(B) ஆவர்த்தம், அநாவர்த்தம், புனராவர்த்தம், அந்தரிதம்
(C) அந்தரிதம், அநாவர்த்தம், ஆவர்த்தம், புனராவர்த்தம்
(D) புனராவர்த்தம், ஆவர்த்தம், அநாவர்த்தம், அந்தரிதம்

87. கீழே கொடுக்கப்பட்டுள்ளதை பொருத்தி சரியான விடையை தேர்வு செய்யவும்

| | | | |
|---|---|---|---|
| (a) | பாதங்கள் | 1. | மகாமண்டபம் |
| (b) | முழங்கால் | 2. | கோபுரம் |
| (c) | மார்பு | 3. | அர்த்த மண்டபம் |
| (d) | கழுத்து | 4. | ஆஸ்தான மண்டபம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

88. கீழ்வரும் வாக்கியங்களை ஆராயவும்

1. கோபுரம் ஸ்தூலலிங்கமாகும்.
2. கோபுர தரிசனம் கடவுளது பாத தரிசனம் என்பர்

(A) 1 மட்டும் சரி
(B) 2 மட்டும் சரி
(C) 1 சரி, 2 தவறு
(D) 1-ம் 2-ம் சரி

www.kalvinews.com

89. முதலாழ்வார்கள் பாடிய பாசுரங்களின் எண்ணிக்கை

(A) 173
(B) 100
(C) 216
(D) 300

90. நம்மாழ்வார் அருளிச் செய்த திவ்வியப் பிரபந்தங்கள்

(A) திருசந்த விருத்தம், நான்முகன் திருவந்தாதி
(B) திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி
(C) திருமாலை, திருப்பள்ளியெழுச்சி
(D) திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி, திருவாய்மொழி

91. பட்டியல் I ஐ பட்டியல் II உடன் பொருத்தி, கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீடுகளைக் கொண்டு சரியான விடையைத் தேர்ந்தெடு :

| | பட்டியல் I<br>ஆழ்வார்கள் | | பட்டியல் II<br>பிறந்த நட்சத்திரம் |
|---|---|---|---|
| (a) | திருமழிசையாழ்வார் | 1. | ஆனி சுவாதி |
| (b) | நம்மாழ்வார் | 2. | தை மகம் |
| (c) | பெரியாழ்வார் | 3. | மார்கழி கேட்டை |
| (d) | தொண்டரடிப்பொடியாழ்வார் | 4. | வைகாசி விசாகம் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 2 | 4 |
| (B) | 2 | 4 | 1 | 3 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

92. பெரியாழ்வார் பாடிய பாசுரங்களின் எண்ணிக்கை யாவை?

(A) 173
(B) 273
(C) 373
(D) 473

93. பொய்கையாழ்வார் அவதரித்த ஊர் எது?

(A) தஞ்சாவூர்
(B) திருவரங்கம்
(C) திருச்சி
(D) காஞ்சிபுரம்

www.kalvinews.com

94. பார்த்தனுக்கு சாரதியாகி தேரோட்டியது யார்?

(A) அர்ஜுனன் (B) நகுலன்

(C) கிருஷ்ணன் (D) பீமன்

95. "பெரிய திருமடல்" எனும் நூலை எழுதியவர்

(A) குலசேகர ஆழ்வார் (B) திருமங்கை ஆழ்வார்

(C) பேயாழ்வார் (D) ஆண்டாள்

96. "அவதாரங்களை" கோட்பாடாக கொண்ட சமயம் எது?

(A) ஜைனம் (B) புத்த

(C) சைவம் (D) வைணவம்

97. "விசிஸ்டாத்வைதத்தை" போதித்தவர்

(A) சங்கரர் (B) இராமானுஜர்

(C) மத்வர் (D) ரமணர்

98. வைணவ சமயத்தில் எத்தனை பிரிவுகள் உள்ளன?

(A) 1 (B) 2

(C) 3 (D) 4

99. வைணவ சமயத்தில் திருமாலின் அவதாரங்கள் எத்தனை?

(A) 7 (B) 8

(C) 9 (D) 10

100. மகாவிஷ்ணு வேதங்களை கடலில் இருந்து மீட்க எடுத்த அவதாரம் ———— ஆகும்.

(A) வாமனாவதாரம் (B) பரசுராமாவதாரம்

(C) மச்சாவதாரம் (D) கூர்மாவதாரம்

www.kalvinews.com

101. பொருத்துக :

| | மாதம் | | திருவிழாக்கள் |
|---|---|---|---|
| (a) | மாசி | 1. | உத்திரம் |
| (b) | பங்குனி | 2. | விசாகம் |
| (c) | சித்திரை | 3. | மகம் |
| (d) | வைகாசி | 4. | சித்திரை |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 4 | 3 | 2 | 1 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

102. கீழ்கண்ட கருத்துக்களில் தவறானதை சுட்டிக்காட்டு :

I. சைலஜம் – கல்லால் செய்யப்படுவது
II. இரத்னஜம் – மாணிக்கம், மரகதம் முதலியவற்றால் செய்யப்படுவது
III. லோகஜம் – தங்கம் மற்றும் வெள்ளியால் செய்யப்படுவது
IV. க்ஷணிகம் – மரத்தினால் செய்யப்படுவது

(A) II மற்றும் III தவறானவை
(B) IV மட்டும் தவறானது
(C) III மற்றும் I தவறானவை
(D) I மட்டும் தவறானது

103. கீழ்காணும் பூதங்கள் மற்றும் அதிதேவதை ஆகியவற்றை பொருத்துக :

| | பூதங்கள் | | அதிதேவதை |
|---|---|---|---|
| (a) | அப்பு | 1. | சதாசிவம் |
| (b) | தேயு | 2. | மகேசுவரன் |
| (c) | வாயு | 3. | விஷ்ணு |
| (d) | ஆகாசம் | 4. | சிவன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 3 | 4 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 2 | 1 | 3 | 4 |
| (D) | 4 | 2 | 1 | 3 |

104. எந்த விக்கிரகத்தின் முன் சென்று "அடியேன் இறைவனை வணங்குவதற்கு அனுமதி செய்தருளும்" என்று வேண்டிக் கொள்ள வேண்டும்?

(A) துவார பாலகர்
(B) விநாயகர்
(C) சண்டேசுரர்
(D) சனீசுவரர்

www.kalvinews.com

105. பின்வருவனவற்றுள் மாயைக்குரிய குணங்கள் யாவை?

(A) பல்கலை கற்றும் அறியாமை, கண்டது மறுத்தல், அறிந்தது மறுத்தல்

(B) பிடித்தது விடாமை, மோகம் மிகுதல், வருத்தமுறுதல்

(C) யான் எனது என்று விஞ்சுதல், பொறாமை, அறியாமை

(D) முக்திக்கு வழிவகுத்தல், ஆன்ம ஞானத்தை பெருக்குதல், சரியான மோட்சமார்கத்தை தேர்ந்தெடுத்தல்

106. சிவம் என்பதன் பொருள்

(A) முதற்கடவுள்

(B) அர்த்த நாரீஸ்வரர்

(C) உலகப் பொருள்

(D) வைணவ கடவுள்

107. சைவம் என்னும் சொல்லின் பொருள்

(A) விஷ்ணுசம்பந்தம் உடையது

(B) சிவசம்பந்தம் உடையது

(C) சக்திசம்பந்தம் உடையது

(D) ஒத்த பொருள் உடையது

108. சூக்ஷ்ம சரீரம் எத்தனை உறுப்புக்களைப் பெற்றுள்ளது?

(A) 5 (B) 7

(C) 9 (D) 16

109. சிவபெருமான் சகுணராக இருக்கும் போது எத்தனை குணங்களைப் பெற்றுள்ளார்?

(A) 5 (B) 6

(C) 7 (D) 8

www.kalvinews.com

110. "பண்டைத் தமிழர்களின் நடுகல் வழிபாடு" என்பது

(A) விளையாட்டு வீரர்களை சிறப்பு செய்வது

(B) அரசனின் வெற்றியை வழிபடும் முறை

(C) இறந்தார்க்கு கல்நட்டு வழிபடும் முறை

(D) கல்வெட்டுக்கள்

111. தைத்திங்களில் வழிபடும் விழா எது?

(A) தீபாவளி

(B) மார்கழி விழா

(C) கார்த்திகை

(D) பொங்கல் விழா

112. தமிழ் கடவுள் முருகப் பெருமான் கோயில் கொண்டிருக்கும் வீடுகள் எத்தனை?

(A) ஐந்துபடை

(B) ஆறுபடை

(C) ஏழுபடை

(D) எட்டுபடை

113. "எல்லோரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே" என்ற பாடலை இயற்றியவர் யார்?

(A) தாயுமானவர்

(B) அருணாசலக்கவிராயர்

(C) தாண்டவராயர்

(D) அபிராமிபட்டர்

114. பன்னிரு திருமுறைகளை இயற்றியவர்கள்

(A) ஆச்சாரியர்கள்

(B) ஆழ்வார்கள்

(C) நாயன்மார்கள்

(D) பௌத்தர்கள்

115. பேயுருக்கொண்டு தலையால் நடந்து கையிலைக்குச் சென்ற அடியார் யார்?

(A) திருவாலவாயுடையார்

(B) கபிலதேவநாயனார்

(C) காரைக்காலம்மையார்

(D) கல்லாட தேவநாயனார்

www.kalvinews.com

116. பின்வருவனவற்றுள் எந்த ஒரு இணை சரியானதல்ல?

(A) முளையீடு - பாலிகையெனும் மண்பாத்திரத்தில் மண்ணினை நிரப்பி வித்துகளைச் சிதறி முளை வளர விடுதல்

(B) கணபதி பூஜை - தேவர்களை பூஜித்து இடையூறு வராமல் காக்கும் வேண்டுதல்

(C) காப்புக் கட்டு - ஆச்சாரியனுக்கு இடையூறுகள் வராமல் கையில் மந்திர பூர்வமாகக் கயிறு கட்டுதல்

(D) பிம்பசுத்தி - விக்கிரகத்தில் உள்ள அழுக்கை நீக்கி அபிடேகம் செய்தல்

117. பலிபீடம் அமைக்கப்பட்டுள்ள இடம்

(A) நந்தி தேவருக்கு பின்னால்

(B) விநாயகருக்கு பின்னால்

(C) கொடி மரத்திற்கு முன்னால்

(D) கொடி மரத்திற்கு பின்னால்

118. கர்ப்பக்கிரகத்திற்கு முன்புள்ள மண்டபம்

(A) முக மண்டபம்

(B) மஹா மண்டபம்

(C) அர்த்த மண்டபம்

(D) ஸ்நபன மண்டபம்

119. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க.

I. கோயிலினுள் இருக்கும் பிரகாரங்கள் மூன்று, ஐந்து, ஏழாகக் காணப்படுகின்றன.

II. பலமுறை பிரகாரங்களைச் சுற்றி வலம் வருவது கோசங்களைக் கடந்து இறைவன் விளங்குகிறான் என்பதை உணர்த்துகிறது.

(A) I மட்டும் சரியானது

(B) II மட்டும் சரியானது

(C) I மற்றும் II சரியானவை

(D) I மற்றும் II தவறானவை

120. சரியானதை தேர்ந்தெடுக்க.

I. அழகிய புஷ்பங்களால் இறைவனை அலங்கரித்தல் மாலை சாத்தலாகும்.

II. சிவந்த நெல்லரிசி நிவேதனத்துக்கு மிக உத்தமம்.

III. சந்நிதியில் சாம்பிராணிப் புகை புகைத்தல் தூபம் எனப்படும்.

IV. தீபத்திற்கு பசுவின் நெய் உபயோகிக்கலாகாது.

(A) I மற்றும் II சரியானவை

(B) I மற்றும் III சரியானவை

(C) I, II மற்றும் III சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

www.kalvinews.com

121. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்ந்து விடையளி.

கூற்று (a) : இறைவன் உலகைப் படைத்தான்.

காரணம் (b) : உயிர்களின் அழுக்கைப் போக்க உலகைப் படைத்தான்.

(A) (a) மற்றும் (b) சரி. (b)-யானது (a)-க்கான காரணம் அல்ல

(B) (a) மற்றும் (b) சரி. (b)-யானது (a)-க்கான காரணம்

(C) (a) சரி, (b) தவறு

(D) (a) மற்றும் (b) தவறு

122. வால்மீகி —————— என்ற காவியத்தை இயற்றியவர்.

(A) மகா்பாரதம்

(B) இராமாயணம்

(C) பகவத் கீதை

(D) பிரம்மஞான போதம்

123. பொருத்துக :

| | ஊர்ப்பெயர் | | கோயிலின் பெயர் |
|---|---|---|---|
| (a) | திருவாரூர் | 1. | கணபதீச்சுரம் |
| (b) | திருப்பத்தூர் | 2. | திருத்தணி |
| (c) | திருச்செங்காட்டங்குடி | 3. | தாடகையீச்சரம் |
| (d) | திருப்பனந்தாள் | 4. | பூங்கோயில் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 3 | 1 |
| (B) | 4 | 2 | 1 | 3 |
| (C) | 2 | 3 | 4 | 1 |
| (D) | 2 | 1 | 4 | 3 |

124. பின்வருவனவற்றில் எது கோயிலின் வகை இல்லை?

(A) பெருங்கோயில்

(B) குறுங்கோயில்

(C) இளங்கோயில்

(D) கரக்கோயில்

www.kalvinews.com

125. திசைகளை ஆடையாக அணிந்த சமண சமயத்தில் உள்ள பிரிவின் பெயர்

(A) திகம்பரர்
(B) சுதம்பரர்
(C) வைபாடியர்கள்
(D) சௌத்ராந்திகரர்கள்

126. கீழ்கண்டவற்றுள் சரியாக பொருந்தாத இணையை கண்டறிக

(A) அகிம்சை - கொல்லாமை
(B) சத்யம் - உண்மை
(C) அஸ்தேயா - திருடுதல்
(D) பிரம்மச்சரியம் - திருமணமாகாதவர்

127. அத்வைத மதத்தை தோற்றுவித்தவர்

(A) மத்துவர்
(B) சங்கரர்
(C) இராமானுஜர்
(D) புத்தர்

128. வேதாந்த மதம் என்று அழைக்கப்படுவது எது?

(A) அத்வைதம்
(B) விசிஷ்ட அத்வைதம்
(C) துவைதம்
(D) சைவம்

129. சிவஞானபோதம் என்ற நூலின் ஆசிரியர் யார்?

(A) நரசிம்மன்
(B) மெய்கண்டதேவர்
(C) நம்மாழ்வார்
(D) அருணந்திசிவனார்

130. கூற்று (A) : திருக்கோயில்கள் இறைவனை வணங்கும் இடமாக இருந்து வருகின்றன.

காரணம் (R) : திருக்கோயில்கள் அக்கால சமூக, அரசியல், பொருளாதார நிலைகளை அறியப் பேருதவி புரிகின்றன.

(A) (A) மற்றும் (R) சரி, (A) விற்கான காரணம் (R) சரி
(B) (A) மற்றும் (R) சரி, (A) விற்கான காரணம் (R) அல்ல
(C) (A) சரியானது ஆனால் (R) தவறு
(D) (A) மற்றும் (R) தவறானது

www.kalvinews.com

131. தென்னிந்திய வைணவத்தின் இரு பிரிவுகளில் ஒன்று வடகலை மற்றொன்று

(A) மேல் கலை
(B) கீழ் கலை
(C) தென் கலை
(D) புறக் கலை

132. தமிழ் வைணவ சமய நூலினைக் குறிப்பிடுக

(A) பன்னிரு திருமுறைகள்
(B) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்
(C) திருவருட்பயன்
(D) திருவருட்பா

133. வைணவ சமயத்தின் முழுமுதற் கடவுள் எது?

(A) சிவன்
(B) விஷ்ணு
(C) பிரம்மன்
(D) விநாயகர்

134. ஒரு மனிதனின் தினசரி கடமையானது

(A) நைமித்திகம்
(B) நித்தியம்
(C) காமியம்
(D) பிராயசித்தம்

135. சித்து, அசித்து இவைகளை உடம்பாகக் கொண்டு, இவற்றின் சேர்க்கையால் இரண்டற்ற ஒன்றான பிரம்மம் என்ற சிறப்பினை உடையது

(A) அத்வைதம்
(B) துவைதம்
(C) விசிஷ்டாத்வைதம்
(D) அத்வைதம் மற்றும் துவைதம்

136. இராமானுஜர் கருத்துப்படி அப்ரதக்சித்தி எவ்வகையான தொடர்பினை குறிக்கிறது?

(A) வெளியார்ந்த தொடர்பு
(B) உள்ளார்ந்த தொடர்பு
(C) விவரிக்க முடியாத தொடர்பு
(D) உள்ளார்ந்த மற்றும்வெளியார்ந்த தொடர்பு

www.kalvinews.com

137. விசிஷ்டாத்வைதத்தின்படி ஒரு பொருளும் அதன் குணமும் போல சேர்ந்து இருப்பது

(A) சித்து மற்றும் அசித்து இரண்டும்

(B) அசித்து மற்றும் பரபிரம்மம் இரண்டும்

(C) சித்து மற்றும் பிரம்மம் இரண்டும்

(D) சித்து, அசித்து மற்றும் பரபிரம்மம் மூன்றும்

138. விசிஷ்டாத்வைதத்தின் விசேஷமாக கூறப்படுவது எது?

(A) கடவுளும் ஆன்மாக்களும் எந்நிலையிலும் எக்காலத்திலும் வேறுவேறானது

(B) வேறுபாடுகளே பொருட்களின் சிறப்பம்சமாகும்

(C) சித்தையும் அசித்தையும் உடலாக கொண்டதே பிரம்மம்

(D) சித்தும் அசித்தும் பிரம்மம் போல் சுதந்திரமானவை

139. சிவஞான சித்தியாரின் ஆசிரியர் யார்?

(A) அருணந்தி சிவாசாரியார்

(B) மெய்கண்டதேவ நாயனார்

(C) உமாபதி சிவம்

(D) மனவாசகம் கடந்தார்

140. மகாபாரதத்தை இயற்றியவர்

(A) பதஞ்சலி முனிவர்

(B) வால்மீகி முனிவர்

(C) வியாச முனிவர்

(D) பரஞ்ஜோதி முனிவர்

141. ஆழ்வார்களது ஒப்பற்ற படைப்புகளான பாசுரங்கள் எவ்வாறு அழைக்கப் பெறுகின்றன?

(A) பாஷ்யங்கள்

(B) அருளிச் செயல்கள்

(C) அணிந்துரைகள்

(D) ஆத்மவிசாரங்கள்

142. 120 ஆண்டுகள் உயிர் வாழ்ந்ததாகக் கருதப்படும் வைணவப் பற்றாளர் யார்?

(A) சங்கரர்

(B) விவேகானந்தர்

(C) இராமானுஜர்

(D) மத்துவர்

143. நம்மாழ்வாரால் அருளிச் செய்யப்பட்டது

(A) திருவள்ளுவ மாலை

(B) திருத்தவத் தாண்டவம்

(C) திருமந்திரம்

(D) திருவாய்மொழி

www.kalvinews.com

144. 'நல்ல பெண்களை மணந்து அவரோடு இன்பம் நுகர்வதே முக்தியாகும்' என்ற கூற்றுக்கு உரியது

(A) சீக்கிய சமயம்

(B) சமண சமயம்

(C) பௌத்த சமயம்

(D) உலகாயதம்

145. கீழ்கண்டவற்றுள் எந்த இணை சரியானதல்ல?

(A) சாங்கியம் - கபிலர்

(B) யோகம் - பதஞ்சலி

(C) மீமாம்சம் - ஜெய்மினி

(D) அத்வைதம் - இராமானுஜர்

146. 'மீமாம்சம்' என்ற வார்த்தையின் பொருள் யாது?

(A) இகழ்ச்சிக்குரிய எண்ணம்

(B) பக்தியற்ற எண்ணம்

(C) பக்திக்குரிய எண்ணம்

(D) போற்றுதலுக்குரிய எண்ணம்

147. விசிட்டாத்வைதத்தின் வேறு பெயர் யாது?

(A) ஸ்ரீசம்ரதாயா

(B) பிரம்மசம்ரதாயா

(C) ருத்ரசம்ரதாயா

(D) சனகசம்ரதாயா

148. பின்வருவனவற்றில் யார் புறசந்தானச்சாரியார் இல்லை?

(A) மெய்கண்டதேவர்

(B) பரஞ்சோதியார்

(C) மறைஞான சம்பந்தர்

(D) உமாபதிசிவம்

149. கீழ்கண்டவற்றுள் புத்தசமய பிரிவு அல்லாதது எது?

(A) மாத்தியமிகம்

(B) யோகசாரம்

(C) சௌத்திராந்திகம்

(D) வைசேசம்

150. சுவாமி விவேகானந்தரின் கருத்துப்படி 'வித்வாத்' என்பது

(A) இப்பிறவியின் பலன்கள்

(B) முற்பிறவியின் பலன்கள்

(C) அடுத்த பிறவியின் பலன்கள்

(D) (A) மற்றும் (B)

www.kalvinews.com

151. கீழ்காணும் பட்டியல் I-ல் உள்ள மூல மந்திரங்களை பட்டியல் II-ல் உள்ள இறைவனோடு பொருத்துக.

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| மூலமந்திரம் | | இறைவன் | |
| (a) | ஓம் சரவண பவாய நம | 1. | கணபதி |
| (b) | ஓம் உமா தேவ்யை நம | 2. | சுப்பிரமணியர் |
| (c) | ஓம் கணபதயே நம | 3. | தேவி |
| (d) | ஓம் நமோ நாராயணாய | 4. | விஷ்ணு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 4 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 4 | 2 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

152. தீபம் என்பது

1. ஆத்மாவின் மலத்தைப் போக்கி ஞானத்தைக் கொடுக்கிறது.
2. பசுவின் நெய் உபயோகிப்பது அதமம்

(A) 1-ம் 2-ம் சரி
(B) 1 தவறு 2 சரி
(C) 1சரி 2 தவறு
(D) 1-ம் 2-ம் தவறு

153. சரியாக பொருத்துக.

| பட்டியல் I | | பட்டியல் II | |
|---|---|---|---|
| (a) | சிருட்டி | 1. | காப்பாற்றுதல் |
| (b) | ஸ்திதி | 2. | அருளல் |
| (c) | சம்ஹாரம் | 3. | உண்டாக்குதல் |
| (d) | அனுக்கிரகம் | 4. | அழித்தல் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 1 | 4 | 2 | 3 |
| (B) | 2 | 3 | 1 | 4 |
| (C) | 3 | 1 | 4 | 2 |
| (D) | 4 | 2 | 3 | 1 |

154. "உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்" எனக் கூறியவர்

(A) திருஞானசம்பந்தர்
(B) திருநாவுக்கரசர்
(C) திருமூலர்
(D) திருவள்ளுவர்

www.kalvinews.com

155. "திருமாலை தவிர வேறு தெய்வத்தை வணங்கமாட்டேன்" என பாடிய ஆழ்வார்

(A) பூதத்தாழ்வார்
(B) பேயாழ்வார்
(C) பொய்கையாழ்வார்
(D) ஆண்டாள்

156. ஜடப்பொருளும் ஆன்மாக்களும் கடவுளின் ———— என்று இராமானுஜர் குறிப்பிடுகிறார்.

(A) பொய் தோற்றங்கள்
(B) பண்புகள்
(C) அவதாரங்கள்
(D) வாகனங்கள்

157. கீழ்க்கண்டவற்றுள் விசிஷ்டாத்வைதத்தோடு பொருந்தாதது எது?

(A) ஆன்மாக்களும் உலகமும் கடவுளின் உடலாகும்
(B) பரப்பிரமம் ஒருவரே
(C) நிர்மலமான பக்தியே முக்திக்கான சாதனம்
(D) ஆன்மாக்கள் பரப்பிரமத்தைப் போல் சுதந்திரம் உடையவை

158. கீழ்க்கண்டவர்களுள் பெரிய நம்பியுடன் நெருங்கிய தொடர்புடையவர் யார்?

(A) மத்வாசாரியர்
(B) சங்கராசாரியர்
(C) பிள்ளை லோகாசாரியர்
(D) இராமானுஜாசாரியர்

159. உயிர்கள் ஏழுவகையான மறைப்புக்கு உட்பட்டவை என கூறியவர்

(A) இராமகிருஷ்ணர்
(B) இராதாகிருஷ்ணன்
(C) இராமலிங்க அடிகளார்
(D) ஸ்ரீ அரவிந்தர்

160. இராமானுஜர் சரீரி இல்லாமல் சரீரமும், சரீரம் இல்லாமல் சரீரியும் இல்லை என்று கூறுவதில் 'சரீரம்' என்பது எதனைக் குறிக்கும்?

(A) பரப்பிரமம்
(B) சித்து
(C) அசித்து
(D) சித்து மற்றும் அசித்து

www.kalvinews.com

161. "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி தானே மந்திரம் என்ப" என்ற சூத்திரம் இடம்பெற்ற நூல் எது?

(A) பிரம்ம சூத்திரம்
(B) யோக சூத்திரம்
(C) திருமந்திரம்
(D) தொல்காப்பியம்

162. பொருத்துக :

(a) ஆவாகனம் — 1. இறைவனின் அருளை பெறுதல்
(b) ஸ்தாபனம் — 2. இறைவனை வரவழைத்தல்
(c) சந்நிதானம் — 3. இறைவனின் கருணையை வேண்டல்
(d) சந்நிரோதனம் — 4. இறைவனை அமர்த்துதல்

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 4 | 1 | 3 |
| (B) | 1 | 3 | 2 | 4 |
| (C) | 3 | 2 | 4 | 1 |
| (D) | 4 | 1 | 3 | 2 |

163. பொருத்துக :

(a) ஸ்தூல பஞ்சாக்கரம் — 1. சிவாய, சிவாய சிவ
(b) சூட்சும பஞ்சாக்கரம் — 2. நமசிவாய
(c) காரண பஞ்சாக்கரம் — 3. சிவாய நம
(d) மகாகாரண பஞ்சாக்கரம் — 4. சிவ

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 4 | 1 | 3 | 2 |
| (B) | 3 | 4 | 2 | 1 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 2 | 3 | 1 | 4 |

164. சிவாலயங்களில் கர்ப்பக்கிரகத்தின் தென்பாகத்தில் தென்திசை நோக்கி வீற்றிருப்பவர்

(A) நடராஜர்
(B) லிங்கோத்பவர்
(C) அர்த்தநாரீஸ்வரர்
(D) தட்சிணாமூர்த்தி

www.kalvinews.com

165. பின்வருவனவற்றுள் தவறான ஒன்றை தெரிவு செய்க.

(A) ஜபம் மானசம், மந்தம், வாசகம் என மூவகைப்படும்

(B) மனதிற்குள் ஜபிப்பது மானசம் ஆகும்

(C) தனக்கு மட்டும் கேட்கும் வண்ணம் மெல்ல உச்சரிப்பது மந்தமாகும்

(D) பிறர் அறியாதவாறு உச்சரிப்பது வாசகம் ஆகும்

166. பரார்த்த பூஜையென்பது

I. ஆலயத்தில் இருக்கும் மூர்த்திகளுக்கு பூஜை செய்வித்தல் ஆகும்.

II. அது நித்தியம், நைமித்திகம், காமிகம் என மூன்று வகைப்படும்.

III. நித்திய பூஜையென்பது வாரத்திற்கு ஒரு முறை செய்யப்படும்.

IV. நைமித்திக பூஜை நாள்தோறும் செய்யப்படும்.

(A) I மற்றும் II சரியானவை

(B) I மற்றும் III சரியானவை

(C) I மற்றும் IV சரியானவை

(D) அனைத்தும் சரியானவை

167. பாண்டியனின் வெப்பு நோயைப் போக்கிய நாயன்மார் யார்?

(A) திருநாவுக்கரசர்

(B) சுந்தரர்

(C) மாணிக்கவாசகர்

(D) திருஞானசம்பந்தர்

168. வரலாற்று ஆதாரமாக விளங்கும் புராணம் எது?

(A) வாமன புராணம்

(B) ஸ்கந்த புராணம்

(C) பாகவத புராணம்

(D) விஷ்ணு புராணம்

169. பொருத்துக :

| எழுத்துக்கள் | | பஞ்ச பூதங்கள் | |
|---|---|---|---|
| (a) | 'ந'காரம் | 1. | வாயு |
| (b) | 'ம'காரம் | 2. | பிருதிவி |
| (c) | 'சி'காரம் | 3. | அப்பு |
| (d) | 'வ'காரம் | 4. | தேயு |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 2 | 3 | 4 | 1 |
| (B) | 1 | 4 | 2 | 3 |
| (C) | 4 | 2 | 3 | 1 |
| (D) | 3 | 4 | 1 | 2 |

www.kalvinews.com

170. கீழ்க்கண்ட கூற்றுகளை ஆய்க

கூற்று : (a) சைவ சித்தாந்தம் சத்காரிய வாதத்தை ஏற்றுள்ளது

காரணம் : (b) சத்காரிய வாதம் உள்ளது போகாது, இல்லது, வாராது எனக் கூறுகிறது

(A) (a) மற்றும் (b) உண்மை. (b) யானது (a) க்கான காரணம்

(B) (a) மற்றும் (b) உண்மை (b) யானது (a) க்கான காரணம் அல்ல

(C) (a) உண்மை (b) தவறு

(D) (a) மற்றும் (b) தவறு

171. கீழ்க்கண்ட பட்டியல்களை பொருத்துக :

| | | | |
|---|---|---|---|
| (a) | காணாபத்யம் | 1. | முருகன் |
| (b) | கௌமாரம் | 2. | விஷ்ணு |
| (c) | ஸௌரம் | 3. | கணபதி |
| (d) | வைணவம் | 4. | சூரியன் |

| | (a) | (b) | (c) | (d) |
|---|---|---|---|---|
| (A) | 3 | 1 | 4 | 2 |
| (B) | 4 | 2 | 3 | 1 |
| (C) | 2 | 4 | 1 | 3 |
| (D) | 1 | 2 | 3 | 4 |

172. எல்லா மந்திரங்களுக்கும் மூல மந்திரமாக இருப்பது எது?

(A) காயத்திரி மந்திரம்

(B) பிரணவ மந்திரம்

(C) ரிக் வேதம்

(D) சாம வேதம்

173. கீழ்க்கண்டவற்றுள் தேவார மூவர் அல்லாதவர் யார்?

(A) திருஞான சம்பந்தர்

(B) திருநாவுக்கரசர்

(C) சுந்தரர்

(D) மாணிக்கவாசகர்

174. கோளறு பதிகம் பாடியவர் யார்?

(A) மாணிக்கவாசகர்

(B) திருஞான சம்பந்தர்

(C) ஆண்டாள்

(D) நம்மாழ்வார்

www.kalvinews.com

175. வரலாற்று ஆசிரியர் டாக்டர் போப்பு தமிழர்களுடைய சமயம் என்று கூறுவது

(A) சைவ சமயம்
(B) வைணவ சமயம்
(C) சமண சமயம்
(D) புத்த சமயம்

176. "திருவாசகத்துக்கு உருகார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" எனக் கூறியவர்

(A) மாணிக்கவாசகர்
(B) திருநாவுக்கரசர்
(C) காரைக்கால் அம்மையார்
(D) திருமூலர்

177. ஏழாம் திருமுறை என அழைக்கப்படும் பாடல்

(A) திருவாசகம்
(B) பெரியபுராணம்
(C) தேவாரம்
(D) திருவந்தாதி

178. 'திருக்கோவையார்' யாரால் பாடப்பட்டது?

(A) திருஞான சம்பந்தர்
(B) மாணிக்கவாசகர்
(C) சுந்தரர்
(D) திருநாவுக்கரசர்

179. பெரியபுராணம் யாரால் இயற்றப்பட்டது?

(A) சேக்கிழார்
(B) நம்பியாண்டார் நம்பிகள்
(C) பரணதேவநாயனார்
(D) நக்கீரதேவ நாயனார்

180. திருமந்திரத்தை இயற்றியவர் யார்?

(A) சேந்தனார்
(B) திருவாலி அமுதனார்
(C) பட்டினத்தார்
(D) திருமூலர்

181. மாணிக்கவாசகர், திருநாவுக்கரசு, திருஞான சம்பந்தர், சுந்தரர் போன்றோர்கள் —————— என அழைக்கப்படுவர்

(A) சந்தானச்சாரியார்கள்
(B) சமயக் குரவர்கள்
(C) ஆழ்வார்கள்
(D) வைணவ உரையாசிரியர்கள்

www.kalvinews.com

182. ஐந்தாம் வேதம் என்று அழைக்கப்படுவது எது?

(A) இராமாயணம்

(B) மகாபாரதம்

(C) பகவத் கீதை

(D) மீமாம்ஸை

183. "இடும்பை நோய் ஓட்டும் ருத்ரன்" எனக் கூறியவர்

(A) சிவஞான சித்தியார்

(B) சிவஞான முனிவர்

(C) மெய்கண்டார்

(D) பரஞ்சோதியார்

184. தென்முகக் கடவுளை 'மௌன குரு' என்றழைத்தவர்

(A) அன்னி பெசன்ட் அம்மையார்

(B) பிளாவட்சுகி அம்மையார்

(C) காரைக்காலம்மையார்

(D) மங்கையர்கரசியார்

185. கண்ணப்ப நாயனாரின் திருவுருவம் தனியாகக் காணப்படும் இடம் எது?

(A) திருமருகல்

(B) திருமழபாடி

(C) திருக்காளத்தி

(D) திருவண்ணாமலை

186. சரியான வரிசையைக் கண்டறிக.

(A) திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம்

(B) திருவேரகம், திருப்பரங்குன்றம், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய்

(C) திருவேரகம், திருவாவினன்குடி, திருச்சீரலைவாய், திருப்பரங்குன்றம்

(D) திருவாவினன்குடி, திருவேரகம், திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய்

www.kalvinews.com

187. திருவாசகத்தின் நூலாசிரியர் யார்?

(A) திருக்கோவையார்
(B) திருவள்ளுவர்
(C) மாணிக்கவாசகர்
(D) மூலதேவ நாயனார்

188. 'இருபா இருபஃது' என்ற நூலை அருளியவர் யார்?

(A) மெய்கண்ட தேவர்
(B) உமாபதி சிவாச்சாரியார்
(C) திருவுந்தியார்
(D) அருணந்தி சிவாச்சாரியார்

189. மதுரகவியாழ்வார் அவதரித்த ஊர்

(A) திருக்கோளூர்
(B) ஸ்ரீவில்லிபுத்தூர்
(C) திருக்குறையலூர்
(D) திருக்கடல் மல்லை

190. பெரியாழ்வாரால் வளர்க்கப்பட்ட ஆழ்வார் யார்?

(A) பேயாழ்வார்
(B) பொய்கையாழ்வார்
(C) ஆண்டாள்
(D) நம்மாழ்வார்

191. விஷ்ணு சித்தர் என்பது யாருடைய புனைப் பெயர்?

(A) பெரியாழ்வார்
(B) பூதத்தாழ்வார்
(C) பேயாழ்வார்
(D) குலசேகர ஆழ்வார்

192. பேயாழ்வார் பிறந்த ஊர் ———— ஆகும்.

(A) மைலாப்பூர்
(B) மாமல்லபுரம்
(C) திருவில்லிபுத்தூர்
(D) மதுரை

193. மாமல்லபுரத்தில் அவதரித்த ஆழ்வார் யார்?

(A) நம்மாழ்வார்
(B) ஆண்டாள்
(C) மதுரகவியாழ்வார்
(D) பூதத்தாழ்வார்

www.kalvinews.com

194. சரீரங்களில் அனைத்திற்கும் உள்ளாந்த சரீரமாக இருப்பது எது?

(A) யாதனா சரீரம் (B) ஸ்தூல சரீரம்

(C) காரண சரீரம் (D) கஞ்சுக சரீரம்

195. வழிபாடுகளில் பிறர்பொருட்டு செய்யப்படுவது எது?

(A) ஆன்மார்த்தம் (B) நித்தியம்

(C) காமிகம் (D) பரார்த்தம்

196. பூஜையில் செய்யப்படும் உபசாரங்கள் எத்தனை?

(A) 5 (B) 7

(C) 9 (D) 16

197. கார்த்திகை மாதத்தில் எந்த தெய்வத்தை வழிபடுவர்?

(A) சிவன் (B) கணபதி

(C) முருகன் (D) பெருமாள்

198. சங்க காலத்தில் மருதநில மக்கள் யாரை வழிபட்டனர்?

(A) சிவன் (B) இந்திரன்

(C) மாயோன் (D) முருகன்

199. சிவபெருமானின் எட்டு குணங்களில் இல்லாதது எது?

(A) தன்வயத்தனாதல் (B) இயற்கை உணர்வினனாதல்

(C) முற்றும் உணர்தல் (D) யாவர்க்கும் அருளல்

200. ஸ்வஸ்திக் சின்னம் எந்த இறைவனுக்கு உள்ளது?

(A) முருகன் (B) சிவன்

(C) விநாயகர் (D) பெருமாள்

www.kalvinews.com

SPACE FOR ROUGH WORK

SEAL